# சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்

## செய்தியாளர் பயணத்தின் போது கலெக்டர் நேரில் ஆய்வு



**சேலம்,டிச.19-**
சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, (18.12.2025) செய்தியாளர் பயணத்தின் போது நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இச்செய்தியாளர் பயணத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்கள் தரமாகவும், உரிய கால அளவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 4 ½ ஆண்டுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதலவரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், பள்ளிகள் உட்கட்டமைப்புத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞரின் கனவு இல்லம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ரூ.94.68 கோடி மதிப்பீட்டிலான 3,108 திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2,703 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 405 பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சி, மோட்டூர் கிராமத்தில் ரூ.6.75 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளதையும், கூனையூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.16.45 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தினையும், மடத்துப்பட்டி கிராமத்தில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் ரூ.3.1 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வீட்டினையும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், கோனூர் ஊராட்சி, மேட்டுதானப்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.0.43 இலட்சம் மதிப்பில் சாலையோரத்தில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளதையும், கரட்டுப்பட்டி பனங்காடு பகுதியில் ரூ.10.55 இலட்சம் மதிப்பீட்டில் 25,000 எண்ணிக்கையிலான நாற்றங்கால் அமைக்கும் பணியினையும், குஞ்சாண்டியூர் ஊராட்சியில் ரூ.8.44 இலட்சம் மதிப்பீட்டில் மதிய உணவு திட்டத்தின் கீழ் சமையலறை கூடம் அமைக்கப்பட்டு வருவதையும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், குடிநீர் தொடர்பான கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துப் பணியாற்றிடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இச்செய்தியாளர் பயணத்தில் கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.



**அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி வருகிற சட்டமன்றத் தேர்தலில் நாமக்கல் தொகுதியில் போட்டியிட வேண்டி ராசிபுரம் நகரச் செயலாளரும் முன்னாள் நகர மன்ற தலைவருமான எம்.பாலசுப்பிரமணியம் தலைமைக் கழக நிர்வாகிகளிடம் விருப்ப மனு தாக்கல் செய்தார்.**

# குந்தாரப்பள்ளி முதன்மை பதப்படுத்தும் நிலையம், சென்னப்பள்ளியில் விவசாயம் சார்ந்த உணவு பதப்படுத்தும் தொழில் வளாகம், மலர் சாகுபடி பணிகள்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் நேரில் ஆய்வு

**கிருஷ்ணகிரி,டிச.19-**
கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், குந்தாரப்பள்ளி கிராமத்தில் முதன்மை பதப்படுத்தும் நிலையம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சென்னப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள விவசாயம் சார்ந்த உணவு பதப்படுத்தும் தொழில் வளாகம், சென்னப்பள்ளி கிராமத்தில் ஜிப்சோபில்லா மலர் சாகுபடி பணிகள் ஆகியவற்றை கலெக்டர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கலெக்டர் , குந்தாரப்பள்ளி முதன்மை பதப்படுத்தும் நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். குந்தாரப்பள்ளி முதன்மை பதப்படுத்தும் நிலையம் தமிழ்நாடு விநியோகத் தொடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.5.79 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டது. இம்முதன்மை பதப்படுத்தும் நிலையத்தில் நாளொன்றுக்கு 2 மெ.டன் அளவிலான விவசாய விளைபொருட்களை தரம் பிரித்து சிப்பமிடுதலுக்கான பணிகளை மேற்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. 2020-ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கிய முதன்மை பதப்படுத்தும் நிலையத்தில் 2020-21-ஆம் ஆண்டில் 475.00 மெ.டன், 2021-22-ஆம் ஆண்டில் 593.66 மெ.டன், 2022-23-ஆம் ஆண்டில் 654.97 மெ.டன், 2023-24-ஆம் ஆண்டில் 118.50 மெ.டன் அளவிலான விளைபொருட்கள் பதப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 24.11.2023 முதல் பீனிக்ஸ் குளோபல் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரராக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு தக்காளி கூழ் உலர்த்தப்பட்ட இனிப்பு, உப்பு, காரநெல்லி, கொய்யா, மாங்காய், எலுமிச்சை, கத்தரி, தக்காளி, பாகற்காய், கருவேப்பிலை, கொத்தமல்லி, துளசி, கருப்பு திராட்சை, ஆரஞ்சு மற்றும் சாம்பல் பூசணி ஆகியவற்றை தயாரித்து வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வணிகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த செப்டம்பர்-2024 முதல் மாதுளை தோலை உலர்த்தி பதப்படுத்தும் பணிகள் மேற்கொண்டு, இதுவரை 400 மெ.டன் அளவிலான மாதுளை தோல் அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னப்பள்ளி கிராமத்தில், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பாக, ரூ.21.43 கோடி மதிப்பில் புதயதாக கட்டப்பட்டுள்ள உணவு பதப்படுத்தும் தொகுப்பு அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சென்னப்பள்ளி கிராமத்தில் விவசாயி.பசவராஜ் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பாக, மொத்த தொகை ரூ.25 இலட்சத்தில் 50 சதவிகித மானியம் ரூ.12,50,000 மதிப்பில் 2700 ச.அ பரப்பளவில், பசுமைக் குடில் அமைத்து, ஜிப்சோபில்லா மலர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு, நாற்று கொள்முதல், நடவு பணிகள், பராமரிப்பு, மலர் சாகுபடி மற்றும் விற்பனை குறித்தும், மேலும், மலர் சாகுபடியின் போது ஏற்படும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை சார்பாக வழங்கப்படும் தொழில்நுட்பங்கள் குறித்து கலெக்டர் விவசாயிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் குணவதி, உதவி இயக்குநர் ஜெனிபர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) சிவநதி, வேளாண் அலுவலர்கள் அருள்தாஸ், பவித்ரா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை செயலாளர் அருள்மணி (தர்மபுரி), வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை வேளாண் அலுவலர்கள் சுனிதா, மாதேஷ், கண்காணிப்பாளர் பழனியம்மாள், நபார்டு உதவி பொதுமேலாளர் ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# நாமக்கல் மாவட்ட சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவை முன்னிட்டு 103 பயனாளிகளுக்கு ரூ.28.38 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்



**நாமக்கல்,டிச.19-**
நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (18.12.2025) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில், மேயர் து.கலாநிதி முன்னிலையில், சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவை முன்னிட்டு 103 பயனாளிகளுக்கு ரூ.28.38 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபை 18, டிசம்பர் 1992 அன்று இன, மத அல்லது மொழியியல், தேசிய அல்லது இன சிறுபான்மையினருக்கு பொருந்தும் தனிநபர் உரிமைகள் பற்றிய அறிக்கையை அங்கீகரித்து அறிவித்தது. அதனை நினைவு கூறும் வகையில், இந்தியாவில் சிறுபான்மையினர் உரிமைகள் தினம் முதன் முதலில் 2013-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் தேதி நிர்ணயிக்கப்பட்டு அனுசரிக்கப்படுகிறது.தமிழ்நாடு முதலமைச்சர் சிறுபான்மையினர், பழங்குடியினர் மற்றும் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும், சிறுபான்மையினரின் வாழ்வாதாரம் முன்னேற மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம், மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் -டாம்கோ திட்டம், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம், பதிவு பெற்ற வக்பு நிறுவனங்களில் பணிபுரியும் உலமா பணியாளர்களுக்கு மானிய விலையில் இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம், கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம், கிறித்துவ தேவாலயங்கள் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணி, சிறுபான்மையினர் தேவாலயங்களுக்கென இறந்த உடலை அடக்கம் செய்வதற்கென கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான் அமைத்தல், சிறுபான்மையினர்களுக்கு மின் மோட்டாருடன் கூடிய விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் மற்றும் சிறுபான்மையின மாணவிகளுக்கு கிராமப்புற பெண்கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முஸ்லீம், கிறிஸ்தவர், சீக்கியர், புத்த மத்ததினர், சீக்கியர்கள், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த சிறுபான்மையின மக்களுக்கு சுயதொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.20.00 இலட்சம் முதல் ரூ.30.00 இலட்சம் வரை டாம்கோ கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 1326 பயனாளிகளுக்கு ரூ.6.32 கோடி வழங்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழு கடன் ரூ.1.00 இலட்சத்திலிருந்து தற்போது ரூ.1.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மூலம் 49 பயனாளிகளுக்கு ரூ.5.98 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், 75 உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களில் உள்ள பழுது நீக்கம் சுற்றுச்சுவர்களை சீரமைத்தல், புதிய சுற்றுச்சுவர் அமைத்தல், பாதைகள் புனரமைத்தல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அரசின் அனைத்து திட்டங்களையும் சிறுபான்மையின மக்கள் பயன்படுத்திக் கொண்டு தங்கள் பொருளாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் உயர்த்தி கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சிறுபான்மையினருக்கு என்றென்றும் ஒரு பாதுகாவலனாகவும், உறுதுணையாகவும் இருக்கும் என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முஸ்லீம் உதவும் சங்கம், கிறிஸ்தவர் மகளிர் உதவும் சங்கம் மூலம் சிறு தொழில் தொடங்க 46 பயனாளிகளுக்கு ரூ.8.70 இலட்சம் மதிப்பில் நிதியுதவி, 8 நபர்களுக்கு கிறிஸ்தவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய அட்டை, 30 நபர்களுக்கு ரூ.18.55 இலட்சம் மதிப்பில் டாம்கோ கடனுதவி, 3 நபர்களுக்கு ரூ.19,500/- மதிப்பில் இலவச சலவை பெட்டி, 16 நபர்களுக்கு ரூ.93,726/- மதிப்பில் இலவச தையல் இயந்திரம் என 103 பயனாளிகளுக்கு ரூ.28.38 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் க.பா.அருளரசு, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.கிருஷ்ணவேணி, முஸ்லீம் மகளிர் உதவும் சங்க பிரதிநிதிகள் சுல்தான் பாஷா, நாசர்பாஷா, ஷேக் மைதீன், கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்க பிரதிநிதிகள் ஜோசப்மணி, பிரபுசாமுவேல், காஜி கமிட்டி உறுப்பினர்கள் நவீத், பாஷா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



**நாமக்கல் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் வழக்கறிஞரும், நாமக்கல் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளருமான முரளி பாலுசாமி அ.தி.மு.க அரசின் சாதனைகளை புகைப்படமாக விளக்கி அச்சடிக்கப்பட்ட மாத நாள்காட்டினை முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி வழங்கினார்.**

# திருவாரூரில் மதிமுக வடக்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம்

**திருவாரூர்,டிச.19-**
திருவாரூரில் மதிமு.க வடக்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் தனியார் அரங்கில் நேற்று முன்தினம் நடை பெற் றது.த லை வர் வைகோ வழிகாட்டுதலில்,கழக முதன்மைச் செயலாளர் துரை வைகோவின் கரங்களை வலுப்படுத்தும் வகையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருவாரூர் வடக்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் தனியார் அரங்கில் நடைபெற்றது.மாவட்ட அவைத்தலைவர் ஜெயராமன் தலைமையில் நடைப்பெற்ற கூட்டத்தில் நகர செயலாளர் சோமா கபிலன் வரவேற்றார். மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கமலவேந்தன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.கழகத்தின் லட்சியங்களையும், அடுத்தகட்டப் பணிகள் குறித்தும் புது உறுப்பினர்கள் சேர்த்தல்,தேர்தல் நிதி மற்றும் கழக வளர்ச்சி நிதி,கழகப் பொதுச் செயலாளர் மக்கள் காவலர் நடைபயண நாயகர் வைகோ சமத்துவார் நடைப்பயணம் குறித்து ஆலோசனை மேற்கொள் ளப் பட் டது.மா நில பொருளாளர் செந்தில் அதிபன்,துணை பொதுச்செயலாளர் முருகன்,மாநில கொள்கை விளக்க அணி துணைசெயலாளர் சீனிவாசன், மாவட்ட செயலாளர் சிவ வ டி வேல், மா வட்ட பொருளாளர் காமராஜ்,மாவட்ட துணைச் செயலாளர்கள் ராமச்சந்திரன், சரளா,ஸ்டீபன் ராஜ்,கண்ணன், தாமரைச் செல்வம், மணிவண்ணன்,சிவகுரு மற்றும் அனைத்து ஒன்றிய செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள்,பேரூர் கழக செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இறுதியில் ஒன்றிய செயலாளர் தமிழ்வாணன் நன்றி கூறினார்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **MATHAVAN M S/o. Mathiyalagan Aged 29 Years, Permanently Residing at : D.No. 3/40, East Street, Palappatti, Alanganatham (PO), Senthamangalam (TK), Namakkal District, Tamilnadu - 637 013.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**MATHAVAN M**

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சி.ப. எண். 268 / 2025 / D

ராமசாமி, S/O. லேட். ராமசாமி,
க.எண். 6 / 159, குள்ளங்காடு,
தொட்டிபாளையம், சாமியம்பாளையம்,
கத்தேரி கிராமம்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
............ மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது தாத்தா லேட். ராமசாமி என்பவர் கடந்த **10 –05 –1984** அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
P. SAKTHIVEL., B.com.B.L.,
Advocate. Sankari.

---

**வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி**

ந.க.எண்.மே.எ.அதிமு.8335/2025/டி
நாள்: 10.11.2025

ஏழுமலை
த/பெ.பெருமாள்
கதவு எண்.195,
திருவணப்பட்டி அஞ்சல் மற்றும் கிராமம்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் ...... மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி. ........ எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரராகிய, **எனது தாத்தா திரு.சின்னகோவிந்தன் த/பெ.லேட்.கூசன்** என்பவர் கடந்த 25.09.1983-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், திருவணப்பட்டி அஞ்சல் மற்றும் கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

**மனுதாரர்**

ஏழுமலை
த/பெ.பெருமாள்
கதவு எண்.195,
திருவணப்பட்டி அஞ்சல் மற்றும் கிராமம்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்
செல்: 9385773967

---

மாண்புமிகு எண்.I கூடுதல் சார்பு நீதிமன்றம், சேலம்.
**I.A.No. /2025 in R.E.P.No. 3/2025 in O.S.No. 141/2020**

கனரா வங்கி,
(Erstwhile of Syndicate Bank),
சேலம் குகை கிளை,
பை அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி /
பொது மேலாளர்,மண்டல அலுவலகம்,
சேலம். K. கார்த்திகா
...மனுதாரர் / மனுதாரர்

/ Vs /

1.T.தரணி(வயது 31) த/பெ. தியாகராஜன்
2. K. தியாகராஜன் (வயது67)
த/பெ. கிருஷ்ணசாமி
இருவரின் முகவரி :
க.எண்.106, அவ்வையார் தெரு,
அன்னதானப்பட்டி,சேலம் மாவட்டம்- 2
...எதிர்மனுதாரர்கள் /எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி நெம்பர் நிறைவேற்று மனுவில் மனுதாரர் / மனுதாரர் வங்கி மேற்படி எதிர்மனுதாரர் / எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்த கடனை வசூலிக்க மேற்படி நெம்பரில் சமூகம் கோர்ட்டில் நிறைவேற்று மனு தாக்கல் செய்ததில் மேற்படி நிறைவேற்று மனுவின் எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்களுக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராவதற்காக வருகின்ற **09.01.2026** -ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ சமூகம் கோர்ட்டில் மேற்படி தினத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. இல்லாவிடில் மேற்படி நிறைவேற்று மனு எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
R.R.ரேவதி,M.Com.,B.L., B.Ed.,
வழக்கறிஞர்,சேலம்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.**469/2025/A5**

அண்ணாமலை,
த/பெ. சின்னா கவுண்டர்,
க.எண். 61, எம்.ஜி.ஆர்.நகர்,
ஆரியாகவுண்டம்பட்டி, சூரமங்கலம்,
சேலம் -5.
...மனுதாரர்

/ Vs /

1. திரு. வட்டாட்சியர் அவர்கள்.
சேலம் மேற்கு.
2.திரு.பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்
சேலம் மேற்கு.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தனது பெரியப்பா கண்டா மாணிக்கம், த/பெ. பெத்தா கவுண்டர் என்பவர் கடந்த **15.11.1984** ம் தேதியன்று சேலம் மாவட்டம், சூரமங்கலம், அரியாகவுண்டம்பட்டி, பெருமாள் கோவில் வீதி அருகில், க.எண்.61 -ல் என்ற இடத்தில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக சேலம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
அண்ணாமலை,
த/பெ. சின்னா கவுண்டர், மனுதாரர்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், மேட்டூர்.
இ.ப.சி.ப.எண்.**1072/2025**

A.ரக்ஷந்த், த/பெ. அண்ணாதுரை,
க.எண். 2/3பி, பாரதி நகர்,
வைத்தீஸ்வரா ஸ்கூல் பின்புறம்,
மேட்டூர் அணை.ஆர்.எஸ்.அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 402.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்.
மேட்டூர்.
2. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
மேட்டூர்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தனது தந்தையின் பாட்டி பொன்னி, க/பெ. முத்தண்ண கவுண்டர் என்பவர் கடந்த **05.11.1997** ம் தேதியன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, ஆர்.எஸ்.அஞ்சல், வைத்தீஸ்வரா ஸ்கூல் பின்புறம், பாரதி நகர், க.எண்.2/3பி என்ற முகவரியில் உடல்நிலை சரியில்லாமல் (வயது மூப்பு) காரணமாக இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
A.ரக்ஷந்த், த/பெ. அண்ணாதுரை,
மனுதாரர்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், மேட்டூர்.
இ.ப.சி.ப.எண்.**1071/2025**

A.ரக்ஷந்த், த/பெ. அண்ணாதுரை,
க.எண். 2/3பி, பாரதி நகர்,
வைத்தீஸ்வரா ஸ்கூல் பின்புறம்,
மேட்டூர் அணை.ஆர்.எஸ்.அஞ்சல்,
சேலம் மாவட்டம் - 636 402.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்.
மேட்டூர்.
2. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
மேட்டூர்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தனது அப்பாவின் தாத்தா முத்தண்ண கவுண்டர், த/பெ.குழந்தை கவுண்டர் என்பவர் கடந்த **12.12.1997** ம் தேதியன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, ஆர்.எஸ்.அஞ்சல், வைத்தீஸ்வரா ஸ்கூல் பின்புறம், பாரதி நகர், க.எண்.2/3பி என்ற முகவரியில் உடல்நிலை சரியில்லாமல் (வயது மூப்பு) காரணமாக இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
A.ரக்ஷந்த், த/பெ. அண்ணாதுரை,
மனுதாரர்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.**423/2025/A5**

சித்தையன், த/பெ. ராமசாமி,
க.எண்.64ஏ,பெரமனூர், காமராஜ் காலனி, அஸ்தம்பட்டி, சேலம்.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்.
சேலம்.
2. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
சேலம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தனது தாயார் லட்சுமியம்மாள் க/பெ. ராமசாமி என்பவர் கடந்த **07.12.2000** ம் தேதியன்று சேலம் மாவட்டம், சேலம் டவுன், பெரமனூர், காமராஜ் காலனி, க.எண். 64ஏ -ல் என்ற இடத்தில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக சேலம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
சித்தையன், த/பெ. ராமசாமி,,
மனுதாரர்,
க.எண்.64ஏ,பெரமனூர், காமராஜ்
காலனி, அஸ்தம்பட்டி, சேலம்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.**484/2025/A5**

வீரம்மா பாப்பா,
க/பெ. பழனிவேல் (லேட்),
க.எண்.172, ஆத்துக்காடு ஆன்மீக நிலையம் எதிரில், கோரிமேடு,
கன்னங்குறிச்சி, சேலம் - 8.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்.
சேலம்.
2. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
சேலம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தனது கணவர் பழனிவேல்(லேட்), த/பெ. செல்லையன் என்பவர் கடந்த **30.11.2001** ம் தேதியன்று சேலம் மாவட்டம், கோரிமேடு, கன்னங்குறிச்சி, ஆத்துக்காடு, க.எண். 172 -ல் உள்ள வீட்டில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக சேலம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
வீரம்மா பாப்பா,
க/பெ. பழனிவேல் (லேட்), மனுதாரர்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.**477/2025/A5**

S.மாதையன், த/பெ. லேட்.சீரங்கன்,
க.எண்.5/159, திருப்பதி கவுண்டனூர்,
தளவாய்பட்டி, சேலம்.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்.
சேலம் மேற்கு.
2. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
சேலம் மேற்கு.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தை சீரங்கன், த/பெ. குப்புராமன் என்பவர் கடந்த **23.11.2017** ம் தேதியன்று சேலம் மாவட்டம், சித்தனூர் கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக சேலம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
S.மாதையன், த/பெ. லேட்.சீரங்கன்,
மனுதாரர்,
க.எண்.5/159, திருப்பதி கவுண்டனூர்,
தளவாய்பட்டி, சேலம்.

---

மாண்பமை வருவாய் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாசியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.**221/2024/A5**

P.C.ஜோசப், மருத்துவ அலுவலர்,
பழைய சூரமங்கலம், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், சேலம்-5.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்.
சேலம் மேற்கு.
2. பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
சேலம் மேற்கு.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் த.நிவாஸ் த/பெ. வ.தனசேகர், தா/பெ. த.ஈஸ்வரி என்பவருக்கு ஆண் குழந்தை கடந்த **09.09.2022** ம் தேதியன்று பிறந்தது. (பதிவு எண். **(S2022 / SAL / 7660/000041/01)** சேலம் மாவட்டம்,சேலம் - 636 005, பழைய சூரமங்கலம், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிறந்ததை அறியாமை காரணமாக பிறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது பிறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக சேலம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
P.C.ஜோசப், மனுதாரர்,
மருத்துவ அலுவலர்.

